முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1573

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.01.2024,** வெள்ளிக்கிழமை

1. ஞான ஆனந்த யோக குருவே
ஞானிகள் துணைகொண்ட ஞான குருவே
வானவர்கள் போற்றுகின்ற குருராஜனே
வரம்பல தருகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் 05 ம் நாள், 19.01.2024, வெள்ளிக்கிழமை)
வரமென அரங்கன் உன் தர்மம் தான்
வையகத்தை வழி நடத்தக்கூடும்
3. கூடவே அரங்கன் உன் ஆசிபெற்ற தொண்டர்கள்தான்
அகிலத்தில் ஞான யுகமாற்றம் தரக்கூடும்
வாசிவென்ற சக்திகளாக வருங்காலம்
வரம்பெற்ற உன் வழி தொண்டர்படைதான்
4. தொண்டர்படைதான் உலகினில் ஞானப்படைகளாக
தண்டாயுதன் யான் தேர்வுசெய்கின்ற ஞானிகளாகவும்
உண்டாகி உலகினில் அற்புதம் நடத்த நேரும்
உன் அவதாரத்தின் நோக்கங்களை இவர்கள் மூலமாகத்தான்
5. ஆகவே உலகமெல்லாம் கொண்டு சென்று
ஆறுமுகன் யான் ஞான உலகாக
ஆற்றல்தனை உலகமெங்கும் நிரப்பி
ஞானிகளை அகிலத்தில் எங்கும் உருவாக்கி
6. ஆக்கியே ஞான யுகமாற்றத்தை ஞானவான்கள் நிறைந்த ஞானசபையை
ஞானத்தலைமையையே அரங்கன் உன் அவதார நோக்கமாக
ஆகவே ஆறுமுகன் அகிலத்தில் நிறுவி
அற்புதம் நடத்துவேன் ஆனந்த ஞான யோக

7. உண்மை கலந்த ஆன்மீக அரசியல் களமாக
உன்வழி வரும் தொண்டர்படையே களம்கண்டு
உலகில் ஞான ஆட்சியும்
உலகமாற்றமும் இனிதே நடத்தக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–